இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல் முறையீட்டு எண்84/2022

திரு .ஓம்கார் சிங் மேல்முறையீட்டாளர்கள்

எதிர்

திரு. ஜெய்பிரகாஷ் நரேன்சிங்
மற்றும் ஒருவர் எதிர்மேல்முறையீட்டாளர்கள்

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திரு.எம்.ஆர்.ஷா</u>

1. அலகாபாத் உயர் நீதிமன்ற அதிகாரவரம்பில் உள்ள குற்றவியல் மேல்முறையீடு எண் 304/1983- ஐ இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் அசல் எதிரியால் முன்கொணரப்பட்ட மேற்கூறிய மேல்முறை-யீட்டினை உயர் நீதிமன்றம் அனுமதித்ததன் மூலமாக இ.த.ச., பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34-இன் கீழான குற்றங்களுக்காக அவரை விடுவித்து 15.3.2019-ஆம் தேதியிடப்பட்டு பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் ஆணையுடன் அதிருப்தியடைந்தும், மனக்குறையுற்றும் முதல் தகவல் அளித்தவர்-மரணமுற்றவரின் மகன் தற்போதைய மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுத்தரப்பு வழக்கின்படி, பரஸ்நாத் சிங் மகனான ஓம்கார் சிங் என்பவர் அவரது குடும்ப உறுப்பினர்களான உதய்பான் சிங் மற்றும் அவரது தந்தை ஜெய்பிரகாஷ் நரேன் சிங் (எ) லாலா (1 மற்றும் 2-ஆம் எதிரிகள்) -க்கிடையே பகையுணர்வு இருந்துவந்த காரணத்தினால் தனது தந்தையார் கொல்லப்பட்டார் என்று கூறி கஜிபூர் மாவட்டம், கரண்டா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்தார்.குற்றச்சாட்டின்படி 21.4.1982 அன்று அவரது அண்டைவீட்டாரான கைலாஷ் விஷ்வகர்மா என்பவரின் மகள் திருமணத்திற்கு பெரியப்பா விக்ரம் சிங்குடன் அவரும், அவரின் உறவினரின் தம்பியான இந்திரதியோ சிங்கும் சென்றுள்ளனர்.இரவு 12 மணியளவில் உணவு உண்டபின்னர், அவர் தனது நெருங்கிய உறவினர் மற்றும் அவரது பெரியப்பாவுடன் உறங்குவதற்காக அவரது விசையேற்றம் உள்ள இடத்திற்குச் சென்றபோது அவரது தந்தை பரஸ்நாத் அங்கு முன்பே படுத்திருந்தார்.அவரும், அவருடைய நெருங்கிய உறவினரான இந்திர தியோ சிங்கும் ஒரு கட்டிலின் மீது உறங்கிக்கொண்டிருக்க அவரது பெரியப்பா மற்றொரு கட்டிலின் மீது உறங்கிக் கொண்டிருந்தார்.அங்கு ஒரு கம்பியின் மீது லாந்தர் தொங்கிய நிலையில் எரிந்துகொண்டிருந்தது.ஏறத்தாழ இரவு 2.30-3.00 மணிக்கிடையில், குற்றவாளியான உதய்பான் சிங் அவரது கட்டிலுக்கு அருகாமையில் வந்து படுக்கை விரிப்பை இழுத்ததன் காரணமாக அவரும், அவருடைய நெருங்கிய உறவினரும் விழித்துக்கொண்டனர்.மேலும், அவரது பெரியப்பாவுங்கூட விழித்துக்கொண்டார்.அந்தத் தருணத்தில் ஜெய்பிரகாஷ் நரேன் சிங் (எ) லாலா (எ-2) வற்புறுத்திக் கூறியதாவது, பராஸ் இங்கு படுத்துக் கொண்டிருக்கிறார் என்றும், விரைவாக வந்து அவரை சுட்டுவீழ்த்தும்படி கூறியதன்பேரில் உதய்பான் சிங் (எ-1)

தன்னுடைய தந்தையான பரஸ்நாத் என்பவரின் கட்டிலுக்கு அருகாமையில் சென்று நேர்கோட்டு வீச்சிலிருந்து அவரது நெஞ்சில் குறிவைத்து அவருடைய நாட்டுத் துப்பாக்கியால் அவரைச் சுட்டு வீழ்த்தினார் என்பதுமாகும்.மேலும், தகவல் அளித்தவர் மற்றும் சாட்சிகள் அழுகுரல் எழுப்பியபோது உதய்பான் சிங் தனது நாட்டுத் துப்பாக்கியை மறு நிரப்பீடுசெய்து அவர்களை மிரட்டியதன் காரணமாக அவர்கள் அமைதியாக இருந்தனர்.அதன் பின்னர் இவ்விரண்டு குற்றவாளிகளும் வடக்கு திசை நோக்கி ஓடிச்சென்றனர்.புலன்விசாரணை நடவடிக்கைகளின் போது, புலனாய்வு அதிகாரியானவர் (பு.$$_0_$$) கண்ணுற்ற சாட்சிகள் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்ததோடு தொடர்புடைய சான்றாதாரங்களையும் சேகரித்தார்.புலன்விசாரணை முடிவுற்றதன்பேரில், இ.த.ச., பிரிவு 302/34 உடனிணைந்த பிரிவு 302-இன் கீழான குற்றங்களுக்காக இவ்விரண்டு எதிரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.இவ்வழக்கு கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்தில் மட்டுமே விசாரிக்கப்படவேண்டும் என்பதால், இவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. குற்றவாளி குற்றத்தை மறுத்துரைத்ததனால் முறையே இ.த.ச., பிரிவுகள் 302 மற்றும் 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக கற்றறிந்த அமர்வு நீதிமன்றத்தின் மூலமாக அவர்கள் இருவரையும் விசாரிக்க நேர்ந்தது.

3.எதிரியின் குற்றத்தை நிரூபிக்கும்பொருட்டு ரசுத்தரப்பினர் அ.சா.1-ஓம் கார் சிங்-தகவல் அளித்தவர் மற்றும் அ.சா.-இந்திரதியோ சிங் மற்றும் அ.சா.4-விக்ரம் சிங் (அனைவரும் கண்ணுற்ற சாட்சிகள்) மற்றும் மரணமடைந்தவரின்

சடலக்கூறாய்வை நிகழ்த்திய அ.சா. 3-மருத்துவர் பி.சி.ஸ்ரீவஸ்தவா மற்றும் அ.சா.5-உதவி ஆய்வாளர் கம்தா சிங் ஆகியோரை விசாரித்தனர். அரசுத்தரப்பின் சார்பாக சாட்சியங்கள் முடிவுற்றதன்பேரில், கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழ் எதிரிகளின் கூடுதலான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. அதன்பின்னர் பதிவுருக்களின் சான்றாதாரத்தை முழுமையாக மதிப்பீடு செய்ததன்பேரிலும் மற்றும் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 (கண்ணுற்ற சாட்சிகள்) என்ற நம்பகத்தின்பேரிலும் இ.த.ச., பிரிவு 302-இன் கீழாக தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக எ-1 உதய்பான் சிங்கையும் மற்றும் இ.த.ச., பிரிவு 302 உடனிணைந்த இ.த.ச., பிரிவு 34-இன் கீழாக தண்டிக்கத்தக் ககுற்றங்களுக்காக எ-2 ஜெய்பிரகாஷ் நரேன் சிங் (எ) லாலாவையும் கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாக்கியதுடன் அவர்கள் ஆயுள் தண்டனை அனுபவிக்கவேண்டுமென்று தண்டனை விதித்தது.

4.கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் முறையே இ.த.ச.,பிரிவு302/34 மற்றும் பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு எதிரிகளைக் குற்றவாளி எனத் தீர்மானித்து பிறப்பிக்கப்பட்ட குற்றத்திற்கான தீர்ப்பு மற்றும் தண்டனையின் தீர்ப்புரை மற்றும் உத்தரவுடன் அதிருப்தியடைந்தும், மேலும் மனக்குறையுற்றும், உயர் நீதிமன்றம் முன்பாக எதிரிகள் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்கள். எ-1- உதய்பானை பொறுத்தமட்டில் கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலமாக அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோரை கண்ணுற்ற சாட்சிகள் என்று நம்பியிருந்தபோதிலும், எ-1-உதய்பானை குற்றவாளி எனத் தீர்மானித்து கற்றறிந்த

விசாரணை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கான தீர்ப்புரை மற்றும் உத்தரவை உயர்நீதிமன்றம் உறுதிசெய்து, மூன்று அரசுத்தரப்பு சாட்சிகளும் அவர்மீது குற்றச்செயல் குறிப்பிடவில்லை என்பதாலும், அவரது பங்கு அறிவுறுத்தியது மட்டுமே என்று கூறப்பட்ட முக்கிய காரணத்தினாலும், மேலும் அவரது பங்கினை மிகைப்படுத்தி கூறியிருக்கலாம் என்றும், தரப்பினர் களுக்கிடையில் இருக்கின்ற உடைமைப் பிரச்சினையின் காரணமாக குற்றவாளியான தந்தை - மகன் இவ்விருவரையும் சிறைக்கு பின்னால் வைக்கப்படுவதை காணும்பொருட்டு சாட்சிகளின் மூலமாக சிக்கவைக்கப் பட்டுள்ளனர் என்பதால் எ-2-ஆன ஜெய்பிரகாஷ்நரேன் சிங் (எ) லாலாவை விடுதலை செய்தது.

5.இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் அசல் எதிரியை விடுவித்து உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவால் அதிருப்தியடைந்தும், மேலும் மனக்குறையுற்றும், முதன்முதலாக தகவல் அளித்தவர் தற்போதைய மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

6. மேல்முறையீட்டாளரின் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.டி.பி.சிங் யாதவ், இவ்வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் சங்கதிகளின்படி இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் அசல் எதிரியை விடுவிக்கையில் உயர்நீதிமன்றம் துயரார்ந்த பிழையைப் புரிந்துவிட்டது என்று படுமுனைப்பாக வாதிட்டார்.

6.1.அதுபோன்று 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயரும் மு.த.அ.-இல் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மேல்முறையீட்டாளரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் அழுத்தமாக பணிந்துரைத்தார். மூன்று கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகியோரும், மரணமடைந்தவரும் தூங்கிக்கொண்டிருந்த விசையேற்றக் குழாய் உள்ள இடத்திற் குகுற்றவாளி 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சென்றதாகவும் மரணமடைந்தவரைக் கொலை செய்யவேண்டும் என்ற பொது உட்கருத்துடன் 1-ஆம் எதிரியான தனது மகனுடன் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் உடன் சென்று வேறொரு கட்டிலில் மரணமடைந்தவர் இருந்ததைக்கண்டு அவரை கொல்லும்படி தனது மகனை தூண்டியதன்பேரில் அதன்பின்னர்1-ஆம் குற்றவாளி துப்பாக்கிக்கொண்டு மரணமடைந்தவரை கொன்றதாக பெயர்குறிப்பிட்டுக் கூறியுள்ளனர். ஆதலால் இ.த.ச., பிரிவு 34-இன் உதவியுடன் கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் சரியாக1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றவாளியினுடைய குற்றத்திற்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டது.

6.2. உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவின்படியுங்கூட உள் நோக்கமானது அரசுத் தரப்பால் உறுதிசெய்யப்பட்டதுடன், மெய்ப்பிக்கப்பட்டது என்று மேற்கொண்டு பணிந்துரைக்கப்பட்டது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் எதிரி மீதான குற்றச் செயல் 1-ஆம் எதிரியை தூண்டியது மட்டுமே.

ஆகவே, அவரது பங்களிப்பு சந்தேகத்திற்குரியதாக தெரிகிறது என்னும் ஒரே காரணத்தின் அடிப்படையிலேயே 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் எதிரியை உயர் நீதிமன்றம் விடுவித்துள்ளது என்பது துரதிருஷ்டவசமானது என்று வாதுரைக்கப்பட்டது.

6.3. மேற்கூறிய காண்முடிவு/ கருத்துரை முன்னதான ஊகங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் இணைவின்பேரிலானது என்றும், பதிவுருக்களின் சான்றாதாரத்திற்கு சற்றே முரண்பட்டுள்ளது என்றும் வாதுரைக்கப்பட்டது. கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோரை விசாரித்தன்மூலமாக குற்றவாளியின் இருப்புநிலை அரசுத்தரப்பால் உறுதிசெய்யப்பட்டு நிரூபிக்கப்பட்டிருப்பது உயர் நீதிமன்றத்தால் நம்பப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டது. ஆதலால் இங்குள்ள சம்பவ இடத்தில் குற்றவாளி 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் இருப்புநிலையைச் சந்தேகிப்பதற்கான காரணமில்லை என்று பணிந்துரைக்கப் பட்டது.

7.மேற்கண்ட வாதுரைகளை நிலைநாட்டி தற்போதைய மேல்முறையீட்டை அனுமதிக்கும்படி வேண்டுரைக்கப்பட்டது.

8.மாநில அரசின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.கர்வேஷ் கப்ரா மேல்முறையீட்டாளரை ஆதரித்து 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியை விடுவித்ததில் உயர்நீதிமன்றம் தவறிழைத்துவிட்டதாக பணிந்துரைத்தார்.

9.தற்போதைய மேல்முறையீடானது 1-ஆம் எதிர் மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.எம்.சின்ஹா அவர்களால் எதிர்க்கப்பட்டுள்ளது. இ.த.ச.,பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான குற்றவாளியை விடுதலை செய்கையில் உயர்நீதிமன்றத்தால் நம்பத்தக்க காரணங்கள் அளிக்கப்பட்டுள்ளதனால், இந்திய அரசமைப்பின் வகுமுறைக்கூறு 136-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயலுறுத்துவதன்பேரில் முன்கூறப்பட்டதில் தலையிடுவதற்கான அவசியமில்லை என்று 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் வாதிடப்பட்டது.

9.1.மூன்று அரசுத்தரப்பு சாட்சிகளும், குற்றவாளிக்கு தூண்டியதற்கான பங்கினை மட்டுமே அளித்துள்ளனர் என்றும், எந்தவித குற்றச்செயலையும் அவருக்கு ஒதுக்கவில்லை என்றும் அரசுத்தரப்பினரும் மற்றும் அரசுத்தரப்பு சாட்சிகளின்படியுங்கூட 1-ஆம் குற்றவாளியால் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளிக்கு எதிரான குற்றச்சாட்டு தூண்டியது மட்டுமே என்று உயர் நீதிமன்றத்தால் சரியாக கருத்துரைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்கொண்டு பணிந்துரைத்தார். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் குற்றவாளியை இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக உயர்நீதிமன்றம் சரியாகவே விடுவித்துள்ளது.

10. மேற்கண்ட வாதுரைகளை நிலைநாட்டி தற்போதைய மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்யக்கோரி வேண்டுரைக்கப்பட்டது.

11. அந்தந்தத் தரப்பினர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களை நாங்கள் முழுமையாக கேட்டறிந்தோம்.

12. தற்போதைய வழக்கில் 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரின் பெயர் ஆரம்பத்திலிருந்தே தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்தயெடுப்பிலேயே கவனத்தில் கொள்வது அவசியமாகும். 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியின் பெயர் மு.த.அ.-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவத்திற்கு மூன்று கண்ணுற்ற சாட்சிகள் உள்ளனர். குறிப்பாக அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆவர். மேலும் அரசுத்தரப்பு சாட்சிகள் அனைவரும் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியின் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர் என்றும், இவ்விரண்டு குற்றவாளிகளும் மரணமடைந்தவர் தூங்கிக்கொண்டிருந்த விசையேற்றம் உள்ள இடத்திற்கு வந்தனர் என்றும், அந்தச்சமயத்தில் வேறொரு கட்டிலின் மீது மரணமடைந்தவர் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டவுடன் இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியானவர் மரணமடைந்தவரையும், அவரது மகனையும் கொல்லும்படி தனது மகனை தூண்டினார் என்றும், 1-ஆம் குற்றவாளியும் மரணமுற்றவரை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார் என்றும் அனைவரும் கூறியுள்ளனர். அரசுத்தரப்பு சாட்சிகள் மூவரும் முரண்பாடற்று அரசுத்தரப்பு வழக்கினை முழுமையாக

ஆதரித்துள்ளனர். உயர் நீதிமன்றமுங்கூட அரசுத்தரப்பு சாட்சிகள் மூவரும் நம்பகமானவர்கள் மற்றும் நாணயமானவர்கள் என்பதால் அவர்களை சந்தேகிப்பதற்கான காரணமில்லை என்று குறிப்பாக கருத்துரைத்து தீர்மானித்துள்ளது. ஆதலால், உயர் நீதிமன்றமுங்கூட மூன்று அரசுத்தரப்பு சாட்சிகள் அனைவரும் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோர் நம்பகமானவர்கள் மற்றும் நாணயமானவர்கள் என்று உள்ளபடியாக இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக 1-ஆம் குற்றவாளியினுடைய குற்றத்திற்கான தீர்ப்பினை ஒருமுறை உறுதிசெய்துவிட்டால், அதன்பின்னர் இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியின் இருப்புநிலையை உயர்நீதிமன்றம் சந்தேகித்திருக்கக் கூடாது. மூன்று கண்ணுற்ற சாட்சிகள் அனைவரின் மீதும் சார்வற்று உயர் நீதிமன்றமுங்கூட 1-ஆம் குற்றவாளியினுடைய குற்றத்திற்கான தீர்ப்பினை ஒருமுறை உறுதிசெய்துவிட்டால், 9மூன்று கண்ணுற்ற சாட்சிகளின் மீதுங்கூட சார்வுற்று 1-ஆம் எதிர் மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியினுடைய குற்றத்திற்கான தீர்ப்பினை உயர் நீதிமன்றம் உறுதிசெய்திருக்கவேண்டும்.

12.1.உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட காரணக்கூறுகளிலிருந்து தோன்றுவதாவது மூன்று கண்ணுற்ற சாட்சிகள் அனைவருமே அவர் தன் மகனை குற்றம் செய்யுமாறு தூண்டி பங்களிப்பினை அளித்துள்ளனர் என்றும், அவருடைய குற்றச் செயலுக்காக அவரை குற்றஞ்சாட்டவில்லை என்றும், தந்தை மற்றும் மகனை சிறைக்கு பின்னால் வைத்துப் பார்ப்பதற்காக அவரைப் பொய்யாக சிக்கவைத்துள்ளனர் என்ற நிலையில் அவரது பங்கினை

மிகைப்படுத்திக் கூறியதன் காரணமாகவும் இது இருப்பதால் ஏறத்தாழ அதன் அடிப்படையில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியை உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது என்பதாகும். எவ்வாறிருப்பினும், குற்றவாளிகள் இருவரும்-தந்தை மற்றும் மகன் ஒன்றாக சேர்ந்து மரணமடைந்தவர் உறங்கிக்கொண்டிருந்த இடத்திற்கு/விசையேற்றத்திற்கு சென்றனர் என்பதைக் கவனத்திற்கொள்வது அவசியமாகும். உயர் நீதிமன்றத்தின் படியுங்கூட உள்நோக்கமானது உறுதிசெய்யப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. நிலத் தகராறு காரணமாக தரப்பினர்களுக்கிடையில் பகையுணர்வு இருந்துள்ளதை உயர்நீதிமன்றமுங்கூட கூர்ந்து கவனித்துஉள்ளது. ஆதலால், மரணமுற்றவரைக் கொல்லவேண்டும் என்ற பொது உட்கருத்துடன் அவர் இருந்ததால் அவருடைய மகனைப் பின்தொடர்ந்து சென்று மரணமுற்றவர் வேறொரு கட்டிலின் மீது தூங்கிக்கொண்டிருந்ததைக் கண்டவுடன் அவரைக் கொல்லும்படி தனது மகனை தூண்டினார் என்றும், அதன்பின்னர் மரணமுற்றவரை துப்பாக்கியால் அவரது மகன் கொன்றுள்ளார் என்பதால் இ.த.ச., பிரிவு 34-இன் துணையுடன் 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளிக்கான குற்றத்திற்கு சரியான தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் உயர் நீதிமன்றம் மதிப்பீடு செய்திருக்கவேண்டும்.

எனவே, அவருடைய இருப்புநிலையை ஒருமுறை உறுதிசெய்து நிரூபித்துவிட்டபடியாலும் மற்றும் அவருடைய குற்றச் செயலை தனிப்பட்ட பங்களிப்பாக குற்றஞ்சாட்டப் பட்டிருப்பதாலும், இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியினுடைய குற்றத்திற்கான தீர்ப்பினை உயர்நீதிமன்றம் உறுதி செய்திருக்கவேண்டும்.

12.2.மேலும் இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக 1-ஆம் குற்றவாளியின் குற்றத்திற்கான தீர்ப்பினை உயர் நீதிமன்றம் என்ற முறையில் நிலைநிறுத்தி / உறுதிசெய்துள்ளதை கவனத்தில் கொள்வது அவசியமாகும். எனவே இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக 1-ஆம் குற்றவாளியின் குற்றத்திற்கான தீர்ப்பினை ஒருமுறை நிலைநிறுத்தி/உறுதிசெய்துவிட்டால், இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட 2-ஆம் குற்றவாளியின் குற்றத்திற்கான தீர்ப்பையுங்கூட உயர் நீதிமன்றம் நிலைநிறுத்தி/ உறுதிசெய்திருக்கவேண்டும்.

குற்றவாளிகள் இருவரும் பொதுவான உட்கருத்துடன் மரணமுற்றவர் இருந்த இடத்திற்கு நடுஇரவில் சென்றுள்ளனர், இதன்மேல் கருத்துரைத்ததுபோன்று இந்த உள்நோக்கம் உறுதி செய்யப்பட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளநிலையில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் குற்றவாளியினை விடுவித்ததில் உயர் நீதிமன்றம் துயரார்ந்த பிழைபுரிந்து விட்டது. உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவானது பதிவுருக்களில் உள்ள சான்றாதாரத்திற்கு சற்றே முரண்பட்டுள்ளது. இந்தக் கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு இவ்விரண்டும் சட்டத்தின்படியும் மற்றும் சங்கதிகளின்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

13.மேற்கண்டதை முன்னிட்டும் மேலே கூறப்பட்ட காரணங்களுக்காகவும் தற்போதைய மேல்முறையீடு வெற்றிகாண்கிறது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான 2-ஆம் அசல் எதிரி-ஜெய்பிரகாஷ்நரேன் சிங்கை விடுவித்து உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கேள்விக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு இதன்படி இரத்துசெய்யப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகிறது. மேலும், இ.த.ச., பிரிவு 302/34-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக அவரை குற்றவாளி எனத் தீர்மானித்து ஆயுள் தண்டனை அனுபவிக்கும்படி அவருக்கு தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதையும் கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவும் இதன்படி மீட்டளிக்கப்படுகிறது.

இப்போது 1-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரான 2-ஆம் எதிரியானவர் ஆயுள் தண்டனை அனுபவிக்கும்பொருட்டு நான்கு வார காலத்திற்குள்ளாக சரணடையவேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர்.ஷா
மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சீவ் கன்னா

புது தில்லி,
09.02.2022

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக் கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."